**செய்தி வெளியீடு எண்: 213** **நாள்: 16.03.2020**

## செய்தி வெளியீடு

### கொரோனா வைரஸ் – முகக் கவசம், சானிடைசர், சோப்புகள் அதிக விலைக்கு விற்றால் தமிழக அரசு நடவடிக்கை

கொரோனா வைரஸ் பரவுதல் தொடர்பாக மக்கள் பயணம் செய்யும் பொழுது விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், மருத்துவமனைகள், ஷாப்பிங் மால்கள், திரையரங்கள், பொதுவாக மக்கள் கூடுமிடங்களில் நோய் தாக்கத்தினை தடுக்கும் வகையில் முகக் கவசம் அணிந்து வருகின்றனர். மேலும் நோயின் தொற்றினை தவிர்க்கும் வகையில் மத்திய அரசும் மாநில அரசும் சுகாதார அறிவுரைகளை அலைபேசி வாயிலாக விளம்பரம் செய்து அடிக்கடி கைகளை சோப், திரவ வடிவிலான சோப், சானிடைசர் போன்றவைகளைக் கொண்டு சுத்தம் செய்ய அறிவுறுத்தி வருகின்றனர். இதன் காரணமாக இப்பொருட்கள் சந்தையில் அதிக தேவை ஏற்பட்டுள்ளதனை கருத்தில் கொண்டு சில விற்பனையாளர்கள் இப்பொருட்களை அதிக விலைக்கு விற்பதாக அறியவருகிறது.

எனவே, முகக்கவசம், சோப், திரவ சோப், சானிடைசர் தயாரிக்கும் நிறுவனங்கள் தயாரிக்கப்பட்ட பொருட்கள், பிளாஸ்டிக் கன்டெய்னர், பாக்கட்டுகளில் விற்பனை செய்யும் பொழுது சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 2011 ன் படி அந்த பாக்கட்டுகளில் தயாரிப்பாளர்/ பேக்கர் முழுமுகவரி, பொருளின் அளவு அல்லது எண்ணிக்கை, நிகர எடை/அளவு பொருள் தயாரிக்கப்பட்ட மாதம்/ வருடம், காலாவதியாகும் மாதம்/வருடம், அதிகபட்ச /சில்லரை விற்பனை விலை (அனைத்து வரிகள் உட்பட), புகார் அளிக்கவேண்டிய தொலைபேசி எண் இ–மெயில் முகவரி ஆகியவற்றினை தெளிவாக பாக்கட்டுகளில் குறிப்பிட்டு விற்பனை செய்யவேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகளை மீறி பொட்டலமிடுபவர்கள் மீதும், பொருளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு அதிகமாக பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள், மருந்து நிறுவனங்கள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள் மீதும் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கப்படுகிறது.

பொதுமக்கள் மேற்கண்ட பொருட்களில் குறிப்பிட்டுள்ள விலையினை விட அதிக விலைக்கு விற்பனை செய்யும் நிறுவனங்கள், கடைகள், மருந்துக்கடைகள் போன்றவை குறித்து புகார் அளிக்க தொழிலாளர் துறையினரால் நுகர்வோர் நலன் கருதி செயல்பட்டு வரும் **TNLMCTS ( Tamilnadu Legal Metrology Complaint Tracking System)** என்ற **mobile App** – னை டவுன்லோடு செய்து புகார் தெரிவிக்கலாம் அல்லது **clmchennaitn@gmail.com** என்ற இ–மெயில் முகவரி மூலமாகவோ அல்லது **044–24321438** என்ற தொலைபேசி வாயிலாக புகார் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**